## தலைப்பு 201 – பௌத்த அலுவல்கள் திணைக்களம்

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

---

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

பௌத்த அலுவல்கள் திணைக்களத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றுகைக் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கிணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் பௌத்த அலுவல்கள் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புரைகள் உள்ளடக்கப்பட்ட பொழிப்பு அறிக்கை 2020 யூன் 23 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) உப பிரிவின் பிரகாரம் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2020 திசெம்பர் 02 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வெளியிடப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையுடன் சேர்ந்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 10 உப பிரிவின் பிரகாரம் அந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்படப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினை தவிர்த்து 2019 திசெம்பர் 03 ஆந் திகதிய 271/2019 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட அந் நிதிக்கூற்றுக்கள் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கமைய உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுக்களை பொதுவான ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கமைய தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளக கட்டுப்பாட்டு முறைமையினை தயாரித்து பேணிச் செல்லப்படுவதாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுபடுத்த வேண்டியதுடன், அந்த கட்டமைப்பின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பில் முன்னர் மேற்கொள்ளப்பட்ட மீளாய்வொன்றினை மேற்கொண்டு, அதற்கமைய கட்டமைப்பினை ஆக்கபூர்வமானதாக நடாத்திச் செல்வதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கு அடிப்படையொன்றை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- திணைக்களத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் எண்ணத்தில் அல்லாமல் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பாக தெளிவொன்று பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடு, கணக்கீடு மதிப்பீடுகளின் நியாயமான தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களும் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலும் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவு மற்றும் 38 ஆம் பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை தெரிவித்துக் கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுகளுடன் இணங்குவதாகவும்

(ஆ) இந்த அறிக்கையின் 1.6.1(அ) ஆம் பந்தியில் உள்ளடக்கப்பட்ட அவதானிப்புக்களின் முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரை

### 1.6.1 நிதி நிலைமைக் கூற்று

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| (அ) தலுகம் ஈரியவட்டிய பிரதேசத்தில் சீல் மாாக்கள் நிலையமொன்று நிர்மாணிப்பதற்காக செலவிடப்பட்ட ரூபா 67 மில்லியன் மற்றும் கண்டி பௌத்த அலுவல்கள் ஆணையாளரின் உத்தியோகபூர்வ இல்லத்தின் நிர்மாணப் பணிகளுக்காக செலவிடப்பட்ட ரூபா 12.5 மில்லியன் தொகை நிதிக் கூற்றுக்களில் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களாக நிதியல்லாத சொத்துக்களில் காண்பிக்கப்படடிருக்கவில்லை. | நடைமுறை வேலை நிதி நிலைமைக் கூற்றில் நிதியல்லாத சொத்தாக காண்பிக்கப்பட வேண்டியமை. | இக்கட்டிடங்களின் மதிப்பீட்டுப் பெறுமதியை பெற்றுக்கொள்வதற்காக மதிப்பீட்டுத் திணைக்களத்திறகு கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதுடன் அவ்வறிக்கை கிடைக்கப் பெற்றதும நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்க நடவடிக்கை எடுக்கப்படும் |

| | | |
|---|---|---|
| (ஆ) மீளாய்வாணடின் பொருள் மெய்மையாய்வு அறிக்கையின் மூலம் கைதவிர்ப்பிற்காக பரிந்துரைக்கப்பட்ட பின்னர் கைதவிர்க்கப்பட்ட தளபாடங்கள், உபகரணங்கள், கணனி உபகரணங்கள் மற்றும்41 அலுவலக உபகரண உருப்படிகளின் கிரயத்தை இனங்கண்டு நிதிக் கூற்றுக்களில் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் மீதிகளிலிருந்து கழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கைதவிர்ப்புச் செய்யப்பட் பொருட்கள் நிதிக்கூற்றுக்களில் இருந்து அகற்றப்பட்த வேண்டும். | 2020 நிதிக்கூற்றுக்களில் கழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

## 1.6.2 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடன் இணங்காமை

| கணக்காய்வு அவதானிப்பு | | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| **சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு** | **இணங்காமை** | | |
| 2018 சனவரி 24 ஆந் திகதிய 02/2018 ஆம் இலக்க பொ்து நிர்வாக சுற்றறிக்கை | பதவியணியின் சகலருக்கும் உரித்தாக காணப்படுகின்ற காணப்பட வேண்டிய திறன்களுக்கு இடையே விலகலைத் தீர்ப்பதற்காக எந்த வகையான மனித வள அபிவிருத்தியொன்று இடம் பெற வேண்டுமென ஆராய்ந்து திணைக்களத்திற்கு மனித வளத் திட்டமொன்றை தயாரித்திருக்கவில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் மனிதவள அபிவிருத்தி திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டியிருந்தைம. | 2018 முதல் 2020 வரையான காலப்பகுதிக்காக சுற்றறிக்கையை அடிப்படையாக கொண்டு மனித வள அபிவிருத்தி திட்டமொன்று தயாரிக்கப்படாமல் இருந்ததுடன் 2021 ஆம் ஆண்டிற்காக மனித வள திட்டமொன்று தயாரிக்கப்பட்டு வருகின்றது. |

# 2 நிதி மீளாய்வு

## 2.1 செலவின முகாமைத்துவம்

| <u>கணக்காய்வு அவதானிப்புகள்</u> | <u>பரிந்துரைகள்</u> | <u>கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்</u> |
|---|---|---|
| திணைக்களத்தினால் 12 மீண்டெழும் செலவின விடயங்களுக்காக மற்றும் 4 மூலதன செலவின விடயங்களுக்காக தேவையான | ஆண்டின் தேவைப்பாடு உரிய முறையில் எதிர்வு கூறப்பட்டு நிதியங்கள் உச்ச மட்டத்தில் பயன்படுத்தப்பட | எதிர்பார்க்கப்பட்ட செலவினங்கள் ஏற்படாமை, 3/2016 ஆம் இலக்க சுற்றறிக்கையின் |

| | | |
|---|---|---|
| மொத்த ஏற்பாடு ரூபா 655,795,000 மேற்கொள்ளப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் மீளாய்வாண்டின் இறுதி வரை மொத்த நிதி ஏற்பாட்டில் ரூபா 99,648,992 அதாவது 7 சதவீதம் முதல் 100 வீச்சில் நிதிஏற்பாடு எஞ்சியிருந்தது. | வேண்டியமை. | பிரகாரம் மேற்கொள்ள வேண்டிய அனைத்து சம்பள பரிமாற்றங்கள் இடம்பெறாமை மற்றும் 7/2016 இன் பிரகாரம் சில செலவினங்கள் அமைச்சினால் மேற்கொள்ளப்பட்டமை போன்ற காரணங்கள் இந்த சேமிப்பிற்கு தாக்கமளித்திருந்தது. |

## 2.2 பொறுப்புகள் மற்றும் கடப்பாடுகளை ஏற்படுத்தல்

-------------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் 94(I) இன் பிரகாரம் எந்தவொருகாரணத்தின் பேரில் நிதிஏற்பாடுகளை மிகைத்து பொறுப்புக்கள் ஏற்படுத்தக்கூடாத போதும் அதற்கு முரணாக திணைக்களத்தினால் மீளாய்வாண்டில் 2 விடயங்களுக்காக மேற்கொள்ளப்பட்டிருந்த நிதிஏற்பாட்டின் சேமிப்புக்களான ரூபா 1,236,675 தொகையை மிகைத்து ரூபா 31,597,422 இற்கு பொறுப்புக்கள் ஏற்படுத்தப்பட்டிருந்தன. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நிதியேற்பாட்டு எல்லையினுள் செலவினங்கள் அல்லது கடப்பாடுகள் ஏற்படுத்திக் கொள்ளப்பட வேண்டும். | 2018 ஆம் ஆண்டின் அறநெறிப் பாடசாலை பாடப்புத்தகங்களை அச்சிடுவதற்குரிய ப்டியல் 2019 ஆம் ஆண்டின் இறுதிக் காலாண்டில் கிடைத்ததால் அதற்காக தேவையான நிதிஏற்பாடுகளை மேற்கொள்ள முடியாமல் ஈருந்தமை 2019 திசெம்பர் மாதத்தின் போது நடத்தப்பட்ட அறிநெறிப் பாடசாலகளின அனைத்து இலங்கை மாணவர் திறன் நிகழ்ச்சித்திட்டத்திற்காக சேவை புரிய்ப் பிரதேசங்களுக்கு இணைக்கப்பட்ட உத்தியோகத்தர்களின் மேலதிக நேர வேலைப்படிகளின் உறுதிச்சீட்டுக்கள் தாதமாகி கிடைத்தமையால் இப்பொறுப்புக்கள் ஏற்படுத்த நேர்ந்தது. |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 2019 திசெம்பர் 03 ஆந் திகதிய 271/2019 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் பிரகாரம் நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்ட கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் திறைசேரியால் வழங்கப்பட்ட கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் கூற்றுடன் ஒப்பிடப்பட வேண்டும். எனினும் 6 செலவின விடயங் களுக்காக நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப் பட்டிருந்த ரூபா 4,861,593 ஆன பொறுப்புககள் திறைசேரியின் பொறுப்புக்கள் கூற்றில் காணப்படாததுடன் 5 செலவின விடயங் களுக்காக திறைசேரிக் கூற்றில் காண்பிக்கப்பட்டிருந்த ரூபா 19,894,148 ஆன பொறுப்புக்கள் நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்படவில்லை. மேலும் 5 செலவின விடயங்களுக்குரியதாக நிதிக்கூற்றுக்கள் மற்றும் திறைசேரி பதிவேடுகளில் காண்பிக்கப்பட்டிருந்த ரூபா 32,391,355 ஆன வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது. | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் காலப்பகுதியில் பொறுப்புக்கள் தொடர்பான திறைசேரி பதிவேடு நாளது வரையாக்கப்படாமை காரணமாக மாவட்ட செயலகங்கள் மற்றும் பிரதேச செயலகங்கள் என்பவற்றுக்கு வழங்கப்பட்டிருந்த நிதிஏற்பாடு தொடர்பாக பொறுப்புகள் தொடர்பான சரியான தகவல்கள் திணைக்களத்திற்கு அறிக்கையிடப்பட்டிருக்க வில்லை. |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

------------------------------------------

### 3.1 முகாமைத்துவ நலிவுகள்

-------------------------------------------------

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | சீல் மாதாக்களின் கல்வியை மேம்படுத்தும் நோக்கில் களணி ஈரியவட்டிய பிரதேசத்தில் சில் மாதாக்கள் நிலையமொன்றையும் பயிற்சி நிலையமொன்றையும் ஸ்தாபிக்கும் செயற்பாடுகள் 2011 ஆம் ஆண்டின் | காணியை கையேற்கும் செயற்பாடுகள் துரிதப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டியமை. | காணியை கையேற்கும் சட்டத்தின் 460 ஆம் அத்தியாயத்தின் பிரகாரம் காணி கையேற்பிற்கான விண்ணப்பம் காணி அமைச்சின் செயலாளருக்கு 2011 ஒக்தோபர் 18 ஆந் திகதி அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. கையேற்பு செயற்பாடுகள் களணி பிரதேச |

| | | | |
|---|---|---|---|
| | போது ஆரம்பிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் 2020 நவம்பர் கணக்காய்வுத் திகதி வரையில் 09 ஆண்டுகள் கழிந்திருந்த போதும் அக்காணியை கையேற்கும் செயற்பாடுகள் பூர்த்தி செய்யப்படவில்லை. | | செயலாளரனால் மேற்கொண்டு வருகின்றது. |
| (ஆ) | மேற்படி (அ) பந்தியில் குறிப்பிடப்பட்ட சில் மாதாக்கள் நிலையத்தின் ஸ்தாபிப்பதற்காக நிர்மாணிக்கப்பட்ட கட்டிடத்தின் நிர்மாண வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டு 2014 ஆகஸ்ட் 15 ஆந் திகதி திணைக்களத்திற்கு கையளிக்கப்பட்டிருந்ததுடன் நிலையத்தின் நிர்மாணத்திற்காக தேவையான அடிப்படை வசதிகள் பூர்த்தி செய்யப்பட்டு சில் மாதாக்கள் நிலையத்தினை தாபிப்பதற்கு சந்தர்ப்பம் காணப்பட்ட போதும் 2020 நவம்பர் வரையிலும் அந்நோக்கங்கள் நிலையம் பயன்பாட்டுச் சேவைகள், பாதுகாப்பு மற்றும் சுகநலன் சேவைகளுக்காக 2020 ஆகஸ்ட் வரை ரூபா 2,919,654 செலவிடுவதற்கு நேர்ந்தது. | துரிமாக சில் மாதாக்கள் நிலையத்தையும் பயிற்சி நிலையத்தையும் ஸ்தாபித்து பயிற்சி நிகழ்ச்சிகளை நடாத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | பயிற்சி நிலையத்திற்காக வருடாந்தம் வழங்கப்படும் நிதிஏற்பாடு மட்டுப்படுத்தப்பட்டமையால் இந்நிலையத்தை ஆரம்பிக்க முடியவில்லை. 2020 ஆம் ஆண்டின் போது இந்நிலையத்தை ஆரம்பிக் திட்டமிடப்பட்டிருந்த போதும் கொரோனா நிலைமை காரணமாக அதனை நிறைவேற்ற முடியாமல் இருந்தது. |
| (இ) | திணைக்கள வளவில் அமைந்துள்ள 2 மாடிகளுடன் கூடிய கட்டிடத்திற்காக 2019 மே 30 ஆந் திகதி ரூபா 642,256 கூட்டுத் தொகையான 3 காற்றுச் சீராக்கி இயந்திரங்கள் பொருத்தப்பட்டிருந்ததுடன் அக்கட்டிடத்திற்காக தேவையான முத்தரப்பு மின்சார வசதிகள் வழங்காமை காரணமாக அவ்வியந்திரங்கள் செயற்பாட்டு நிலைமையில் காணப்படவில்லை. மேலும் அவ்வியந்திரத்திற்காக | முத்தரப்பு மின்சார வசதிகள் வழங்கும் செயற்பாட்டை துரிதப்படுத்த வேண்டியதுடன் தேவைப்பாட்டை உரிய முறையில் இனங்கண்டு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | மின்சார சபையினால் மதிப்பீடு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதுடன் அதற்கான நிதிஏற்பாடு அமைச்சிடம் கோரப்பட்டுள்ளதால் அந்த ஏற்பாடும் திணைக்களத்தால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது |

| | | | |
|---|---|---|---|
| | வழங்கப்பட்டிருந்த உத்தரவாத காலத்தில் 1 வருடம் 6 மாத காலம் இயந்திரம் பயன்படுத்தப் படாமல் காலம் முடிவடைந்திருந்தது. | | |
| (ஈ) | பிக்குமார்கள் மற்றும் சீல் மாதாக்களின் கல்வி நடவடிக்கைகளை மேம்படுத்துதல், அறநெறி பாடசாலைகளுக்கு உதவி புரிதல் மற்றும் பௌத்த சிறுவர் சிறார்களுக்கு சலுகை வழங்குதல் போன்ற நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக தாபிக்கப்பட்ட புத்தசாசன நம்பிக்கை பொறுப்பிலும் தச சீல்மாதா நம்பிக்கை பொறுப்பிலும் 2012 ஆம் ஆண்டு முதல்2019 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்கான முதலீட்டு வட்டி வருமானம் முறையே ரூபா 716,740 மற்றும் ரூபா 367,782 தொகை நோக்கங்களை நிறைவேற்றுவதற்குப் பயன்படுத்த முடியுமாக இருந்த போதும் அதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பொறுப்பை தாபித்த நோக்கத்தை நிறைவேற்றுவதற்காக நம்பிக்கை பொறுப்பு நிதியம் செயற்திறனாக பயன்படுத்தப்பட வேண்டும். | நம்பிக்கை பொறுப்பின் நோக்கங்களுக்காக திணைக்களத்திற்கு வருடாந்தம் பாதீடு மூலம் வழங்கப்படும் நிதி போதுமானதாக இருப்பதால் நம்பிக்கை பொறுப்பின் நோக்கங்களில் பல வருடாந்த பாதீட்டு நிதிஏற்பாடு மூலம் மேற்கொள்ளப்படுவதால் நம்பிக்கை பொறுப்பின் வட்டியால் அச்செயற்பாடுகள் மேற்கொள்ளப்படவில்லை. |
| (உ) | அறநெறி பாடசாலைகளின் மேம்படுத்தலுக்கான செயற்பாடுகளுக்காக தாபிக்கப்பட்ட அறநெறி பாடசாலை பொறுப்பில் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 446,517 ஆன வருமான மிகையொன்றும் மாணவர் திறன் செலவின விடயத்தின் கீழ் ரூபா 344,248 ஆன நிதிஏற்பாடு சேமிப்பும் காணப்பட்டது. எவ்வாறாயினும் அமைச்சினால் மேற்கொள்ளப்பட்ட குறை அபிவிருத்தி அறநெறிப் பாடசாலைகளை அபிவிருத்தி செய்யும் | பொறுப்பினை தாபித்த நோக்கங்களுக்காக பொறுப்பினை நிதியங்கள் செயற்திறனாக பயன்படுத்தப்பட வேண்டும். | எஞ்சிய நிதியத்தை 2020 ஆம் ஆண்டின் போது அறநெறி பாடசாலைகளின் மேம்படுத்தலுக்காக ஈடுபடுத்த நடவடிக்கை எடுக்கப்படும். |

நிகழ்ச்சித்திட்டத்திற்காக பரிந்துரைக்கப்பட்ட 102 பாடசாலைகளுக்காக நிதிஏற்பாட்டின வழங்க முடியாமல் போனது. ஆதலால் அமைச்சுடன் உரிய தொடர்பினை மேற்கொண்டு பொறுப்பின் வருமானத்தை குறை அபிவிருத்தி அறநெறிப் பாடசாலைகளின் மேம்பாட்டிற்காக ஈடுபடுத்த சந்தர்ப்பம் காணப்பட்ட போதும் அதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.